## நோயெதிர்ப்பு மருந்துகளை எடுத்துக்கொள்வதனால் ஏற்படும் ஆபத்துகள் யாவை?

நோயெதிர்ப்பு மருந்து ஒன்றின் காரணமாக மிகவும் அரிதான வேளைகளில் ‘ஆனஃபிலாக்ஸிஸ்’ எனப்படும் கடும் ஒவ்வாமை சில பெண்களுக்கு ஏற்படக்கூடும். மருந்துகளின் காரணமாக, குறிப்பாக ‘பெனிஸிலின்’ காரணமாக, உங்களுக்கு ஒவ்வாமை ஏற்படும் வரலாறு இருக்கிறதா என்பதை நீங்கள் உங்களுடைய மாருத்துவச்சி அல்லது மருத்துவருக்குச் சொல்லவேண்டியது முக்கியம்.

‘GBS’ கிருமி இருப்பதற்கான ஆபத்துக்கூறு உங்களுக்கு இருக்கிறது என்றோ, இந்தக் கிருமி உங்களுக்கு இருக்கிறது என்றோ தெரிய வந்தால், பிரசவ வலியின்போது நோயெதிர்ப்பு மருந்துகள் மூலம் உங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டால், உங்கள் குழந்தைக்கு ‘GBS’ தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்பு குறையும்.

### அறுவைப் பிரசவமும்’GBS’ கிருமியும்

திட்டமிடப்பட்ட முறையில் அறுவைப் பிர்சவத்தினை மேற்கொள்ளும் பெண்களுக்கு ‘GBS’ கிருமிக்கான சோதனை செய்யப்படவேண்டியது முக்கியம். இது உங்களுக்குப் பொருந்தும் என்றால், உங்களது மருத்துவச்சி அல்லது மருத்துவரிடம் மேலதிகத் தகவல்கள் வேண்டுமெனெக் கேளுங்கள்.



## மேலதிகத் தகவல்கள்

இச் சோதனையைப் பற்றி, அல்லது ‘GBS’ கிருமியைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் உங்களுக்கு வேண்டுமெனில், உங்களது மருத்துவச்சி அல்லது மருத்துவருடன் பேசுங்கள்.

73 Miller Street, North Sydney, NSW 2060
Locked Mail Bag 961, North Sydney 2059
Tel: 61–2–9391 9000
www.health.nsw.gov.au/kids-families/

SHPN: (HSP) 170654 September 2016




# ‘வகை B ஸ்ட்ரெப்டொகோக்கஸ்’ (Group B Streptococcus) கிருமிக்கான கர்ப்பகால சோதனை

**Pregnancy screening for Group B Streptococcus (GBS)**

## ‘Group B Streptococcus’ கிருமியைப் பற்றிய விபரங்கள்

‘Group B Streptococcus’எனும் நமது சரீரத்தில் வாழும் கிருமியானது பொதுவாக ஆபத்தானதல்ல. ‘GBS’ என்பது ஒரு நிலையற்ற தன்மையுடைய ஒரு கிருமியாகும், அதாவது இது வந்து போகக்கூடிய கிருமி என்பது இதன் பொருள். பாலுறவு ரீதியாகக் கடத்தப்படக்கூடிய ஒரு தொற்றுநோயல்ல இது. மூன்று பெண்களில் ஒரு பெண்ணின் பிறப்புறுப்பில் இந்த ‘GBS’ கிருமி இருக்கும், ஆனால் இது இருப்பதைப் பற்றிப் பெண்களுக்கு ஏதும் தெரியாது. சிறுநீரிலும் ‘GBS’ கிருமியானது காணப்படலாம்.

### ‘GBS’ கிருமியும் புதிதாய்ப் பிறந்த குழந்தைகளும்

பிரசவ வலி மற்றும் பிரசவத்தின் போது ‘GBS’ கிருமியானது குழந்தைக்குக் கடத்தப்படக்கூடும், மற்றும் இரத்தம் விஷமாதல் உள்ளடங்க மூளைக்காய்ச்சல் மற்றும் சன்னி சுரம் ஆகிய உயிருக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நோய்த்தொற்றுகளும் ஏற்படலாம். மிகக் குறைந்த எண்ணிக்கையிலான புதிதாய்ப் பிறந்த குழந்தைகளுக்கே (2000 குழந்தைகளில் 1) ‘ஆரம்ப நிலை ‘GBS’ தொற்று’ எனும் இந்த தொற்று ஏற்படும். ‘GBS’ கிருமிகளைக் குழந்தைக்குக் கடத்தும் அபாயக்கூறு அதிகம் உள்ளவர்களாக அடையாளம் காணப்படும் பெண்களுக்கு நரம்பு ஊசி மூலமாக நோயெதிர்ப்பு மருந்தினை பிரசவ வலி ஏற்படும்போது செலுத்துவதன் மூலம் ‘GBS’ கிருமி குழந்தைக்குக் கடத்தப்படும் அபாயத்தினைக் குறைக்கலாம். பிரசவ வலியின்போது சோதனை செய்யப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டாலும் கூட புதிதாய்ப் பிறக்கும் சில குழந்தைகளுக்கு ‘GBS’ தொற்று ஏற்பக்கூடும். உங்கள் குழந்தைக்கு ‘GBS’ தொற்று ஏற்பட்டால், குழந்தை மருத்துவமனையில் இருக்கும்போதே நோயெதிர்ப்பு மருந்து கொடுத்து அதற்குச் சிகிச்சையளிக்கலாம்.

### சற்று வளர்ந்த குழந்தைகளும் ‘GBS’ தொற்றும்

பிரசவ வலியின் போது தரப்படும் சிகிச்சை அனைத்து வேளைகளிலும் செயலூக்கம் இல்லாததாக இருக்கலாம். ‘GBS’ தொற்று ஏற்படும் சற்று வளர்ந்த குழந்தைகளுக்குக் கூட நோயெதிர்ப்பு மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கலாம்.



## ‘GBS’ கிருமி உங்கள் குழந்தைக்குக் கடத்தப்படும் வாய்ப்பினைக் குறைப்பது எப்படி?

குழந்தைக்கு ‘GBS’ கிருமி கடத்தப்படும் வாய்ப்பினைக் குறைப்பதற்கு ஏதுவாக ‘GBS’ கிருமிகள் உள்ள பெண்களுக்கு சிகிச்சையளிப்பதற்கென அவர்களை அடையாளம் காண வேண்டியது முக்கியம். இரண்டு வழிகளில் இதைச் செய்யலாம், இந்த இரண்டு வழிகளுமே சமமான செயலூக்கம் உடையவையாகும்.

உங்களுக்கு சேவை வழங்கும் சுகாதார சேவையினால் உங்களுக்கு ஒரு வழியிலான சிகிச்சை அளிக்கப்படும். உங்களுக்கு இருக்கக்கூடிய கேள்விகள் அல்லது கரிசனங்கள் எதற்கும் உங்களுடைய மருத்துவர் மற்றும்/அல்லது தாதி மேலதிகத் தகவல்களைக் கொடுத்து பதிலளிப்பார்.



### 1. ஆபத்துக்கூறின் அடிப்படையிலான சோதனை

பிரசவத்தின் போது ‘GBS’ தொற்று ஏற்படும் ஆபத்துக்கூறு அதிகம் உள்ள குழந்தையின் தாய்களை இந்த சோதனை மூலம் அடையாளம் காணலாம். இந்த ஆபத்துக்கூறுகளாவன:

- ‘GBS’ தொற்று உள்ள குழந்தை ஒன்று உங்களுக்கு இதற்கு முன்பு பிறந்திருந்தால்
- உங்களுடைய கர்ப்ப காலத்தில் எப்போதாவது உங்களுடைய சிறுநீரில் ‘GBS’ கிருமி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டிருந்தால் (கண்டுபிடிக்கப்பட்டபோது, நோயெதிர்ப்பு மருந்துகள் மூலம் அதற்குச் சிகிச்சையளிக்கப்பட்டிருந்தாலும் கூட)
- 37 வாரங்களுக்கு முன்பாக உங்களுக்குப் பிரசவ வலி ஏற்பட்டால்
- பிரசவ வலியின் போது உங்களது சரீர வெப்பநிலை 38°C -க்கு மேலாக இருந்தால்
- குழந்தைக்கு நோய்த்தொற்று ஏற்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் காணப்பட்டால்
- உங்களுடைய பன்னீர்க்குடம் உடைந்த பிறகு 18 மணி நேரம் அல்லது அதற்கு மேலாக நீங்கள் பிரசவ வேதனையில் இருந்தால்.

### 2. பிரசவத்திற்கு முன்பு வழக்கமாகச் செய்யப்படும் சோதனையை மேற்கொள்ளும் வழி:

உங்களுடைய கர்ப்பகாலத்தின் 35 வாரத்திற்கும் 37 வாரத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் ‘GBS’ கிருமி உங்களுக்கு இருக்கிறதா என்று அறிவதற்கான சோதனையை நீங்கள் மேற்கொள்ளலாம். கசிவில் சிறிதைத் தொட்டெடுத்து நீங்களே இந்த சோதனையைச் செய்து பார்த்துக்கொள்ளலாம், அல்லது உங்களுடைய மருத்துவச்சி அல்லது மருத்துவரை இந்த சோதனக்கான மாதிரியை எடுக்குமாறு நீங்கள் கேட்கலாம்.

தொட்டு எடுக்கப்பட்ட மாதிரி சோதனைச்சாலைக்கு அனுப்பப்படும், மற்றும் நீங்கள் உங்களுடைய பிரசவத்திற்கு முந்தைய அடுத்த சந்திப்புவேளைக்கு உங்களுடைய மருத்துவரைப் பார்க்கப் போகும்போது அவர் சோதனை முடிவுகளை உங்களுக்குச் சொல்வார்.

## சிகிச்சைத் திட்டம்

‘GBS’ கிருமி உங்களுக்கு இருக்கிறது என்றோ, ‘GBS’ கிருமி உங்களுக்கு இருப்பதற்கான ஆபத்துக்கூறு உங்களுக்கு இருக்கிறது என்றோ தெரிய வந்தால், பிரசவ வலியின்போது நோயெதிர்ப்பு மருந்துகள் மூலம் உங்களுக்கு சிகிச்சையளிக்கப்பட வேண்டுமெனெ சிபாரிசு செய்யப்படுகிறது. உங்களது கர்ப்பகாலத்தின் போது இந்த விடயங்களைப் பற்றி உங்களுடன் கலந்துரையாடப்படும், மேலும் உங்கள் இணக்கத்துடன் உங்களுடைய மருத்துவப் பதிவுகளில் உங்களுக்கான சிகிச்சைத் திட்டம் ஒன்றைப் பற்றிப் பதிவு செய்யப்படும்.